மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துணை மின் நிலையம், அரியலூர் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் 400 கிலோ வோல்ட் இடையார்பாளையம், ராசிப்பாளையம் துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, கோவை, சேலம் மற்றும் மேட்டூர் பகுதிகளின் மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்.

மேற்காணும் அறிவிப்புகள்மூலம் தமிழகம் மின்சாரத்தில் மின் மிகை மாநிலம் என்ற நிலையைப் பெறுவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வளர்ச்சி மேன்மை அடைந்து வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) மாநில ஜவுளி ஆலோசனைக் குழு அமைத்தல், பட்டு வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட நெசவாளர் நலத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிப்பதிலும், மரபு மற்றும் பண்பாட்டினைப் பாதுகாப்பதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கைத்தறி மற்றும் துணி நூல் துறையை ஊக்குவிக்கும் வண்ணமும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வண்ணமும், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக எடுத்து வருகிறது.*

பிற்பகல் 12—45

கைத்தறி மற்றும் துணிநூல் தொழிலையும், நெசவாளர்களையும் மேலும் ஊக்குவிக்கும்வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்:

(1) தமிழ்நாடு பல ஆண்டுகளாக இந்திய ஜவுளித் தொழிலில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான, கைத்தறி, விசைத்தறி, நூற்புப் பிரிவு, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைப் பிரிவுகளை மேலும் வலுப்படுத்தி

TRUTH ALONE TRIUMPHS

வளர்ச்சியினை அடையும்விதமாக அனைத்துப் பிரிவுகளின் கருத்துகளைப் பெற்று ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும்விதமாக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பிரதிநிதிகளை உள்ளடக்கி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 'மாநில ஜவுளி ஆலோசனைக் குழு' ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) தமிழ்நாட்டிலுள்ள 83 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் முதல் 220 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் பட்டு இரக விற்பனையினை மேம்படுத்தவும், சரக்கு இருப்பினை வெகுவாகக் குறைக்கவும் அதன்மூலம் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை உறுதிசெய்யவும், பட்டு இரக துணிகளின் விற்பனைக்கு 15 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் அரசுக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

(3) ஜவுளித் தொழிலில் சர்வதேசத் தரத்துடன்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும்வகையில், மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 14 ஜவுளிப் பூங்காக்கள் 983 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான ஜவுளிப் பூங்காக்களை உருவாக்குவதன்மூலம் ஜவுளித் தொழில் வளர்ச்சி அடையும். தமிழ்நாட்டிலுள்ள ஜவுளி மையங்களில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதை ஊக்குவிக்கும்வகையிலும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும் தொழில்முனைவோர்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி தமிழக அரசால் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

(4) புதிய பதனிடுதல் பூங்காக்கள் உருவாக்குவதுடன் அல்லாமல், ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட பதனிடும் குழுமங்களை மேம்படுத்த, குறிப்பாக, பதனிடும் தொழிலுக்கு நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மைப் பிரிவுகளை மேம்படுத்த மைய அரசு ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது. ஜவுளித் துறையில் தரமான சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பத்தினை ஏற்படுத்தி, உலகளாவிய போட்டியினை எளிதாக எதிர்கொள்வதே ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். மத்திய அரசின் ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்காக 25 விழுக்காடு அளவிற்கு நிதியுதவி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த 'கிரியா ஊக்கத்' திட்டத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவிகள் சிலவற்றை 2015–2016 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது. இருப்பினும், தமிழக பட்டு விவசாயிகளின் நலன்களைத் தொடர்ந்து பாதுகாத்திடும்வகையில், நிறுத்தப்பட்ட சிலவற்றில் முக்கிய திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து மாநில அரசு 2015–2016 ஆம் ஆண்டு முதல் கூடுதல் நிதியினை வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கி, 5 ஆயிரம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை நடவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனியாக பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட ஆயிரம் பட்டு விவசாயிகளுக்கு 8 கோடியே 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4 கோடி ரூபாய் மானியத்தில் பட்டு விவசாயிகளுக்கு 1,400 ஏக்கர் மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டங்கள் 22 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் அறிவிப்புகள் ஜவுளி தொழில் உற்பத்தி பெருகவும், நெசவாளர்களின் வாழ்வு மேலும் பொலிவுறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. மானியக் கோரிக்கைகள் 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

***முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் உயர் கல்வி ஆகிய துறைகளின்மீது நடைபெறும் மானியக் கோரிக்கைகளின்மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்குரிய உயர்ந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற. எங்களுடைய ஊனில், உணர்வில், உதிரத்தில், நாடி நரம்புகளில் கலந்திட்ட உயிரினிய தலைவி மாண்புமிகு தமிழ்நாடு